சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்நகராட்சியினை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்படும் அனைத்து வழக்குகளிலும் ஆஜராகி, வழக்கினை ஏற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ், அடையாறு, அவர்களை இந்நகராட்சியின் வழக்கறிஞராக (Standing Counsel) நியமித்து கொள்ளவும், ஆஜராகிடும் வழக்குகளுக்குண்டான வழக்கறிஞர் கட்டணம் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.910/2022/சி1)

**தீர்மான எண்.145 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்– 33

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜி.எஸ்.டி சாலையில், அமைந்துள்ள சமுதாய கூடம், உணவகம் மற்றும் வணிக கடைகள் பயன்பாட்டிற்கு அனுபிவிக்கும் உரிமையாணை ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலததிற்கு (19.02.2018 முதல் 21.02.2021 வரை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சமுதாய கூடத்தின் உணவனம் நடத்திக் கொள்ளவும், வணிக கடைகள் கட்டிக்கொள்ளவும் எந்தவித ஆட்சேபணை இல்லை என்றும், அதற்கு வேண்டிய உரிய முன் அனுமதி பெற்ற பின்பு நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் தெரிவித்து குத்தகைதாரர் மற்றும் ஆணையாளரிடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் குத்தகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை எண்.3 ல் மேற்படி சமுதாய கூட கட்டிடத்தில் குத்தகை காலம் ஒப்படைக்கும் வரை மி ன் சாதனங்களிலோ மற்றும் கூடத்தின் அமைப்பிலோ எந்த ஒரு சேதாரமும் இன்றி கட்டிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டிட அமைப்புகளை ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியி ன் முன் அனுமதியின்றி மேற்குறிப்பிடப்பட்ட கட்டிடத்தி ன் முன் வாயில் உள்ள வளாக சுவர் இடிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து திரு.ஏ. கண்ணன் என்பவரால் மாவட்ட உரிமையியல் நீதிம ன்றம் செங்கல்பட்டில் அசல் வழக்கு எண்.178/2018 தொடரப்பட்டு வழக்கு நகராட்சியின் சார்பாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மீளவும் 22.02.2021 முதல் 21.02.2024 முடிய மூன்று வருட காலத்திற்கு நகராட்சி சமுதாய கூடம் குத்தகைக்கு விடப்பட்டு திரு. மோகன் குத்தகைதாரரால் குத்தகை உரிமம் அனுபவிக்கப்பட்டு வரப்பெறுகிறது. இந்நிலையில் இந்நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் அமைந்துள்ள வளாகத்தில் ஜி.எஸ்டி ரோடு முகப்பாக ஏற்கனவே அமைக்கப்பட்டு உபயோக்கப்படுத்தாமல் உள்ள சிறிய அளவிலான கடை அமைப்பில் உள்ள கட்டிடத்தினை வருவாய் ஈட்டும் வகையில் குத்தகைக்கு விடலாம். 14¾ x 18 =266 (265.5) சதுர அடியில் அமையப்பெற்றுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் அமையப்பெற்றுள்ள இந்த கடை கட்டிடத்தை சமுதாய கூடம் குத்தகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர் குத்தகை முடியும் காலத்திற்கு தனக்கே குத்தகைக்கு வழங்கிடவும், அளவீடுகள் அடிப்படையில் முன்வைப்பு மற்றும் வாடகை நிர்ணயம் செய்து தரும் பட்சத்தில் சிறிய அளவிலான கடையினை குத்தகை அடிப்படையில் எடுத்துக்கொள்ள வழங்கி உள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1422/2022/அ2)

அ.கு–

சமுதாய நலக் கூடம் ஏற்கனவே 2021 முதல் 2024 வரை குத்தகைக்கு விடப்பட்டு நகராட்சிக்கு வருவாய் ஈட்டுபட்டு வரும் நிலையில், 2018 முதல் 2021 குத்தகையாண்டில் பழைய ஒப்பந்ததாரர் மூலம் அனுமதியின்றி கட்டப்பட்டு, நகராட்சியினை எதிர்த்து தொடரப்பட்டு வழக்கு தீர்ப்பு நகராட்சிக்கு சார்பாக வரப்பெற்றுள்ள நிலையில், 143/4 x 266 சதுர அடி சிறிய அளவிலான கட்டிடம் எந்த வித பயன்பாடுமின்றி இருந்தும் வரும் நிலையில், நகராட்சிக்கு வருவாய் ஏற்படக் கூடிய வகையில் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் வழங்கியுள்ள கடிதம் மீது முடிவு செய்து குத்தகைக்கு விடுவது குறித்தும், அளவீடுகளின்படி முன்வைப்பு தொகை மற்றும் அதற்கான குத்தகை வாடகையினையும் மன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மான எண்.146 நாள். 29.07.2022

குத்தகைதாரர் வழங்கிய கடிதத்தின் மீது மன்றத்தில் விவாதிக்கப்பட்டதின் படி இக்கட்டிடத்தில் உள்ள கடையினை நிர்வாகத்தின் மூலம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைதாரரை தேர்வு செய்துக்கொள்ள மன்றம் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள்– 34**

இந்நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்து வரி மற்றும் காலிமனை வரிக்கான பொதுச் சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சொத்து வரி விதிப்புகளின் எண்ணிக்கை 11844 மற்றும் காலிமனை வரி விதிப்புகளின் எண்ணிக்கை 586 ஆகியவற்றிற்க்கு சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதனை அடுத்து பொது மக்களுக்கு சார்வு செய்திட வேண்டி அதற்கான சிறப்பு அறிவிப்பு கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்ய கீழ்குறிப்பிட்ட அளவில் பேப்பர் மற்றும் டோனர் தேவைப்படுகிறது

1) A4 அளவு பேப்பர் 90 ரீம்
2) கணினி டோனர் (12A + 88A+) – 25 எண்ணம்

மேற்குறிப்பிட்டவாறு பேப்பர் மற்றும் டோனர் சேர்த்து அதற்காகும் தோராய செலவினம் ரூபாய் 2,50,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு–**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை 5 அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.26728/P3/2017, நாள்.20.12.2017 ன் படி வெளிக் கொணர்வு முறையில் (Outsourcing) சப்ளை செய்து கொள்ள அனுமதிஅளித்ததன் பேரில் Relyon facilities Pvt Ltd., நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் பணிக்காலம் 31.07.2022 உடன் முடிவடைகிறது.

**தீர்மான எண்.147 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்– 35**

செங்கல்பட்டு நகராட்சி முதல் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வீடுகளின் எண்ணிக்கை 16818 ஆகும். மக்கள் தொகை 67272 ஆகும். இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளது. தற்போது வளர்ந்து வரும் நகராட்சிகளில் செங்கல்பட்டு நகராட்சியும் ஒன்றாகும். இந்நகராட்சியில் 6.09 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 33 வார்டுகளை உள்ளடக்கிய நகராட்சி ஆகும். மேலும், மொத்தம் 43.934 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் 32.80 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்நகராட்சியில் மாவட்ட ஆட்சியரகம், நீதிமன்றம், 12 எண்ணிக்கையில் உயர்நிலை பள்ளிகள், தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், போக்குவரத்து பணிமனை, இரண்டு இரண்டாம் நிலை பேருந்து நிலையம், ஒரு முதல் நிலை தினசரி சந்தை, மாவட்ட தலைநகர மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி, அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலகங்களும் உள்ளடக்கிய மாவட்ட தலைநகர நகராட்சி ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு அன்றாடம் வந்து செல்லும் (Floating Population) மக்கள் தொகை நாளொன்றுக்கு சுமார் 30000 நபர்கள் ஆகும்.

இந்நகராட்சியில் 193 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படும் நிலையில் 170 நிரந்தர பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது 89 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். தற்போது வாகனம் மற்றும் பேட்டரி வாகனங்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள உள்ளதாலும், வாகனம் இயக்குதல், உரக்குடில்கள் பராமரித்தல், மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல் பணிக்கு 104 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. இப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலைவிகிதத்தின்

அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், அதற்காக செலவினம் ரூ.273.62 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் நிர்வாக அனுமதி பெற பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 607/2021/எச்1)

**தீர்மான எண்.148 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்– 36**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணா நகர், கதவு எண்.2 (சொத்து வரி சிறப்பு அறிவிப்பின் படி பழைய கதவு எண்.A31c) 3வது மெயின் ரோடு, திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவரது தரை தள வணிக கட்டிடத்திற்கு பழைய சொத்து வரி விதிப்பு எண்.018/033/00032 மற்றும் புதிய சொத்து வரி விதிப்பு எண்.018/16034–ல், செலுத்தப்பட்டு வந்திருந்த நிலையில், 2008 ம் ஆண்டு சொத்து வரி சீராய்வின் அடிப்படையில் 21.10.2008 அன்று சொத்து வரித் சிறப்பு அறிவிப்பு மூலம் ரூபாய்.374/ லிருந்து ரூ.748/– ஆக உயர்த்தப்பட்டதை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செங்கல்பட்டு அசல் வழக்கு எண்.08/2011 தொடர்ந்திருந்தார்.

இந்த அசல் வழக்கில் 16.06.2012 ல் கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது,

1. That the suit be and hereby si decreed as prayed for
2. That the defendant be and hereby is restrained from collecting the enhanced property tax from the plaintiffs and the plaintiffs directed to pay the original property tax
3. That the defendant be and hereby have liberty to enhance the tax after following the rules and procedure contemplated in the Municipality act after giving proper notice and hearing the objection from the plaintiffs
4. That there will be no order as to costs

இவ்வாறிருக்க திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவர் தனது 26.04.2022 நாளிட்ட கடிதத்தில், 21.09.2020 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் மேல் முறையீடு செய்தததாகவும், அதனடிப்படையில் 26.04.2022 அன்று நேரடியான விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இக்கடிதத்தில் தனது வணிக கட்டிடத்திற்கு 2008–2009 முதலாம் அரையாண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி சீராய்வு ரூபாய்.374/– ல் இருந்து ரூபாய்.748/– க்கு உயர்த்தப்பட்ட விதித்தில் 2008–2009 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவைகள் செலுத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார். மேலும் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தான் ஏற்கனவே இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செங்கல்பட்டு மூலமாக வழங்கப்பட்ட காசோலை எண்.472455 நாள்.30.12.2013 யினை தான் செலுத்த வேண்டிய நிலுவைக்கு அதாவது 2008–2009 முதலாம் அரையாண்டு முதல் 2010–2011 இரண்டாம் அரையாண்டு வரை 6 அரையாண்டிற்கு ஈடு செய்து திருத்திய கேட்பு அறிவிப்பு வழங்கிடும் பட்சத்தில் நிலுவைகள் செலுத்திட தயாராக உள்ள தெரிவித்து வழங்கி உள்ள கடிதம் மன்றத்தின் பதிவிற்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1) மன்றம் பதிவு செய்யலாம்

2) ஏற்கனவே திரு.எஸ். கே. ஆட்சிநாதன் என்பவரால் வழங்கப்பட்ட இசைவு கடித்ததின் அடிப்படையில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய்.4488/–யினை நிலுவை கேட்பிற்கு ஈடு செய்து கொள்ளவும்,

இவ்வரிவிதிப்பினை litigation தலைப்பில் இருந்து Collectable தலைப்பில் மாற்றிடவும் திருத்தப்பட்ட கேட்பு அறிவிப்பின் வசூல் நடவடிக்கை மேற்கொள்ளவும்நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.149 நாள். 29.07.2022**

1. மன்றம் பதிவு செய்யப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்– 37

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை 5 அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.26728/P3/2017, நாள்.20.12.2017 ன் படி வெளிக் கொணர்வு முறையில் (Outsourcing) சப்ளை செய்து கொள்ள அனுமதிஅளித்ததன் பேரில் Relyon facilities Pvt Ltd., நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் பணிக்காலம் 31.07.2022 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை இந்நகராட்சி பகுதியில் செவ்வனேசெயல்படுத்திடும் விதமாக திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016 யினைஅடிப்படையாக கொண்டு, இப்பணி மேற்கொள்வதற்காக தேவைப்படும் ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களை 2021–2022 ம் வருட மாவட்ட ஆட்சித் தலைவர் செங்கற்பட்டு அவர்களின் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு ஆட்களை கொண்டு பணி மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி அதற்கான செலவினம் ரூபாய்.273.62 இலட்சத்திற்கும் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு உரிய வழி முறையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு மூலம் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட பணிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள்கோரி புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்படும் வரை, இவ்வினத்தில் மூன்று மாத காலம் குறுகிய காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும். அதற்கான தோராய செலவினம் ரூபாய். 22.50 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு–

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்படும் வரை திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கு மூன்று மாத காலம் குறுகிய காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான தோராய செலவினம் ரூபாய்.22.50 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண் 607/2021/எச்1)

**தீர்மான எண்.150 நாள். 29.07.2022**

நிர்வாக நலன் கருதி மூன்று மாத காலத்திற்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை ஒருமாத காலத்திற்கு ரூ.7.50 இலட்சத்திற்கு மட்டும் ஒப்பந்தபுள்ளி கோரவும், ஏற்கனவே ரூ.22.50 இலட்சத்திற்கு வழங்கப்பட்ட முன் அனுமதியினை திருத்தி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் திருத்தம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

பொருள்– 38

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணா நகர், கதவு எண்.2 (சொத்து வரி சிறப்பு அறிவிப்பின் படி பழைய கதவு எண்.A31b மற்றும் A31c) 3வது மெயின் ரோடு, திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவரது

முதலாவது தள குடியிருப்பு கட்டிடத்திற்கு பழைய சொத்து வரி விதிப்பு எண்.018/33033 மற்றும் புதிய சொத்து வரி விதிப்பு எண்.018/033/0044 ல் 2002–2003 முதலாம் அரையாண்டு முதல் ரூபாய்.1185/–சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. சொத்து வரி கூடுதலாக விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செங்கல்பட்டில் திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவர் அசல் வழக்கு எண்.56/2003 ல் வழக்கு தொடர்ந்திருந்தார். இவ்வழக்கில் 07.01.2004 ல் கீழ்கண்டவாறு Exparte தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு தீர்ப்பு விவரம் பின்வருமாறு,

"Suit for declaration that the assessment of property tax bearing No.330033 dated 15.06.2022 as null and void arbitrary and illegal and consequential relief of permanent injunction restraining them from in any way collecting the property tax in pursuance of the same and for cost.

Plaintiff present examined in chief. Exihibits A.1 to A.6 were marked. Suit is declared as prayed for with cost.

Pronounced by me in open Court, this the 7th day of January 2004

2002-2003 முதலாம் அரையாண்டு முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு மேற்தெரிவிக்கப்பட்ட வழக்கு தீர்ப்பில் வழங்கப்பட்ட நிரந்தர தடையாணை காரணமாக சொத்து வரி வசூலிக்கப்படாமல் கணினியில் கேட்பு நிலுவையாக 2002–2003 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவர் தனது 26.04.2022 நாளிட்ட கடிதத்தில் தான் 11.03.2019, 21.09.2020 மற்றும் 20.09.2021 தேதிகளில் மேல்முறையீடு கடிதம் வழங்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இது குறித்து 26.04.2022 அன்று நேரடியாக விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். நேரடியான விசாரணையின் பேரில் தனக்கு 2002–2003 முதலாம் அரையாண்டு முதல் விதிக்கப்பட்ட சொத்து வரி 2007–2008 இரண்டாம் அரையாண்டு வரை செலுத்துவதற்கு தயாராக உள்ளதாகவும், மேலும் 2008–2009 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாவது அரையாண்டு வரை தனது வரிவிதிப்பு எண்ணிற்கு, 2008 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி திருத்தத்தில் 100 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளதை, 2008 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி சீராய்வில் உயர்த்தப்பட்ட 10 சதவிகிதத்தில் ரூபாய்.1304/– ஆக நிர்ணயித்து 2008–2009 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாவது அரையாண்டு வரை கணினியில் திருத்தம் செய்து திருத்தப்பபட்ட கேட்பு அறிவிப்பு தரும் பட்சத்தில் நிலுவையினை செலுத்துவதற்கு தயாராக உள்ளதாகவும் இசைவு தெரிவித்து வழங்கி உள்ள கடிதம் மன்றத்தின் ஒப்புதலுக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1) 2002–2003 முதலாம் அரையாண்டு முதல் விதிக்கப்பட்ட சொத்து வரி தொகை ரூபாய்.1185/– யினை ஏற்று சொத்து வரி செலுத்திடவும், 2008 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி சீராய்வில் குடியிருப்பு கட்டிடத்திற்காக 10 சதவிகிதத்தில் உயர்வு செய்து வழங்கிடவும், அதனடிடையில் நிலுவைகள் செலுத்திட இசைவு கடிதம் வழங்கியுள்ளதன் பேரில், கணினியில் 2008–2009 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாம் அரையாண்டு முடிய 100 சதவிகிதத்திற்கு தவறுதலாக உயர்வு செய்யப்பட்டுள்ள சொத்து வரி கேட்பினை திருத்தம் செய்து 2002–2003 முதலாம் அரையாண்டு முதல் 2021–2022 இரண்டாம் அரையாண்டு வரை திருத்தம் மேற்கொள்ளப்பட்ட அளவில் நிலுவைகள் வசூல் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவரின் கடிதத்தினை மன்றம் பதிவு செய்யலாம்.

2. திரு.எஸ்.கே. ஆட்சிநாதன் என்பவரது இசைவு கடிதத்தின் பேரில் Litigation தலைப்பில் உள்ள இந்த வரி விதிப்பினை Collectable தலைப்பில் மாற்றம் செய்திடவும், கேட்பினை உரிய வகையில் திருத்தம் செய்து தரக் கேட்டுக் கொண்டும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.151 நாள். 29.07.2022**

1. மன்றம் பதிவு செய்யப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்– 39**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் பொதுமக்களின் அன்றாட போக்குவரத்து, அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் மற்றும் குடிநீர் பணிகளுக்கான பைப்லைன்கள் அமைத்தல், Sintex tank உடன் கூடிய போர்வெல் அமைத்தல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நகரமன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், ஆணையாளர், நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படி கீழ்காணும் விவரப்படி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவு தொகை ரூ.73.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 22 | காமராஜர் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 2 | 21 | முனிசிபல் குடியிருப்பு பகுதிக்கு வடிகால் அமைத்தல் | 5.00 |
| 3 | 19 | அங்காளம்மன் கோயில் தெரு முதல் நாவலர் நெடுஞ்செழியன் தெரு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 4 | 27 | குண்டூர் மெயின் ரோடு (LICஅருகில்) பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 5 | 18 | சின்னமணியக்கார தெருவில் RCC சிறுபாலம் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 6 | 15 | CN மகாதேவன் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் | 5.00 |
| 7 | 14 | பெரிய செட்டி தெருவில் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 8 | 12 | சுண்ணாம்பு காரர் தெருவில் (Entrance) மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 5.00 |
| 9 | 5 | காத்தான் தெரு (Entrance) பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 10 | 23 | வரதராஜன் தெருவில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 11 | 13 | மலைபூங்கா பகுதியில் புதியதாக PVC பைப்லைன் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 12 | 26 | திருமலை தெருவிற்கு புதியதாக PVC பைப்லைன் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 13 | 24 | திம்மராஜா குளம் பகுதியில் புதியதாக போர்வெல் மற்றும் syntax அமைக்கும் பணிகள் | 4.00 |
| 14 | 20 | முருகேசனார் தெருவிற்கு புதியதாக PVC பைப் லைன் அமைக்கும் பணிகள் | 5.00 |
| 15 | 17 | பெரிய மணியகாரர் ஈஸ்வரன் தெருவில் பழுதடைந்துள்ள Hand Pump யை அகற்றம் | 4.00 |

| | | | |
|---|---|---|---|
| | | செய்து, sintex உடன் கூடிய போர்வெல் அமைக்கும் பணிகள் | |

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.152 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்– 40**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொதுப்பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தந்த பிரிவு சார்ந்த பணிகளில், இந்நகராட்சினை பிரவாதியாக சேர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்வு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் இதர கீழமை நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படுகிறது. பல நேர்வுகளில் பணிகளை உடனடியாக மேற்கொள்ள சட்டரீதியான அணுகுமுறை தேவைப்படுகிறது. மிக முக்கியமாக பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் உடனடியான சட்ட ரீதியான நடவடிக்கை தேவைப்படுகிறது. நகராட்சி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளப்படும் போது சட்ட ரீதியாக எழும் பிரச்சனை கையாளவும், உடனடியாக தீர்வு காணவும் பிரத்யேகமாக நகராட்சிகென வழக்கறிஞர் தேவைப்படுகிறது.

ஏற்கனவே இந்நகராட்சியினை பொறுத்த மட்டில் அரசு வழக்கறிஞர் திரு. தம்பிரான் என்பவரை நகராட்சி வழக்கறிஞராக தனி அலுவலர் தீர்மானம் எண். நாள் ல் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் நகராட்சி வழக்குகள் மட்டுமன்றி அரசுத் துறை சார்ந்த அனைத்து வழக்குகளிலும் ஆஜராகி வருபவர். பணி நிமித்தம் இவர் தமிழக அரசின் பலதுறை வழக்குகளில் ஆஜராகி வருபவர். இதன் காரணமாக அரசு வழக்கறிஞர்களின் busy schedule ல் நகராட்சிக்கு குறித்த நேரத்தில் தேவைப்படும் சட்ட அறிவுரைகள் பெறுவதற்கு காலதாமதமாகும் வாய்ப்புகள் அதிக அளவில் இருந்து வருகிறது. எனவே களப்பணி மேற்கொள்ளப்படும் இடங்களில், இன்றைய காலச்சூழ்நிலையில் நகராட்சிக்கு உடனடியாக சட்ட ரீதியான அணுகுமறை தேவைப்படும் நேரத்தில் வழக்கறிஞரின் தேவை அதிகரித்துள்ளது.

எனவே, ஏற்கனவே தனி அலுவலரால் மேற்தெரிவிக்கப்பட்ட தீர்மானம் திருத்தப்பட்டு இந்நகராட்சியின் சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்வு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் இதர கீழமை நீதிமன்றங்களில் ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்திடவும், இந்நகராட்சி வழக்கறிஞராக (standing counsel) திரு.D. துரைபாபு, B.A., B.L., அலுவலக முகவரி எண்.2, 10 வது குறுக்குத் தெரு, அண்ணா நகர் செங்கல்பட்டு என்பவரை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு டபிள்யூபி.எண்.8264/2019 மற்றும் பல்வகை மனு எண்.11124,11181 மற்றும் 6487/2019 வழங்கப்பட்டுள்ள தீர்ப்பிற்கிணங்கவும் நகராட்சி வழக்கறிஞராக நியமித்து கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- திரு.D. துரைபாபு, B.A., B.L., என்பவரை நகராட்சியின் சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்வு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் இதர கீழமை நீதிமன்றங்களில் ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்திட நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்து கொள்ளலாம்.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.153 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்– 41

**9–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.R.அமுல்ராஜ் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

பெரிய நத்தம் பகுதியில் உள்ள 1,5,6,7,8,9,10 மற்றும் 11 ஆகிய வார்டுகளில் வசித்து வரும் பொது மக்கள் உடல் நலக்குறைவால் சிகிச்சை பெறுவதற்கு மற்றும் பிரசவ சிகிச்சை பெறுவதற்கும் சர்க்கரை நோயாளிகள் ரத்த அழுத்தம் குறைபாடு உள்ளவர்கள் மாத்திரை வாங்குவதற்கும் 3 கிலோ மீட்டருக்கு மேலாக உள்ள அரசு மருத்துவமனைக்கு அல்லது அனுமந்த புத்தேரி சுகாதார மையத்திற்கு செல்ல வேண்டி உள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர் எனவே 1954–ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் பெரிய நத்தம் வடமலைப்பள்ளி அருகில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தை விரிவாக்கம் செய்து தினமும் மருத்துவர்கள் செவிலியர்கள் வந்து சிகிக்சை அளிக்கும் வகையில் செயல்படுத்திட நடவடிக்கை எடுத்திட தீர்மானம் நிறைவேற்றி தரும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மான எண்.154 நாள். 29.07.2022**

பொது மக்கள் நலன் கருதி நகரமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இப்பொருள் குறித்த நடவடிக்கையினை ஆணையர் (ம) நகர் நல அலுவலர் துரித நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள்– 42

**23–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.R.ராஜி அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

செங்கல்பட்டு நகரம், ஜி.எஸ்.டி சாலையில் கிருஷ்ணா மஹால் திருமண மண்டபம் பக்கத்தில் சுமார் 50 மீட்டர் இடைவெளியில் 3 அரசு மதுபானக் கடைகள் (டாஸ்மாக், எலைட்) இயங்கி வருகிறது. இதனால் காலை 5 மணியிலிருந்து இரவு வரை கடைகளில் மதுபானம் விற்கப்படுகிறது. இந்த பகுதியில் சாலை குறுகளாக இருப்பதாலும் ஜி.எஸ்.டி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அடிக்கடி இந்த பகுதியில் மதுபானங்கள் அருந்திவிட்டு ரோடுகளில் சண்டை சச்சரவு அதிக அளவில் ஏற்படுகிறது.

எதிரில் உள்ள தெருக்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. காலை, மாலை பள்ளி மாணவர்கள் மற்றும் அலுவலகத்திற்கு செல்பவர்கள் மற்றும் பொது மக்கள் இந்த பகுதியை கடப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக இராட்டிணக்கிணறு முதல் புதிய பஸ் நிலையம் வரை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பொது மக்களின் நலன் கருதியும், பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்றும் இந்த 3 மதுபானக் கடையை ஜி.எஸ்.டி சாலையிலிருந்து அப்புறப்படுத்தி வெளியில் அமைக்க தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், இதை மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மான எண்.155 நாள். 29.07.2022**

நகரமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இப்பொருள் மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள்– 43

செங்கல்பட்டு நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தமிழ் வாழ்க என்ற பெயர் பலகை மற்றும் நகராட்சி அலுவலகம் செங்கல்பட்டு என்ற பெயர் பலகை ஆகிய இரண்டு பெயர் பலகையையும் மழை மற்றும் புயல் காற்றினால் சேதடைந்து உள்ளது. இதனை சரி செய்ய இயலாத காரணத்தினால் புதியதாக மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே அந்த இரு பெயர் பலகைகளையும் புதியதாக அமைக்க Supply and Installation of ACP sheet fixing top Acrylic trim cap letter பணியை மேற்கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.6.50/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.156 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்– 44

23 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022–ல் 2022–23 ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் அமைக்க 50.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை சாலையில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.25 பொது கழிப்பிடமும் அண்ணா நகரில் சமுதாய கழிப்பிடம் அமைக்கவும், ரூ.1.28 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தில் பெண்களுக்கான சிறுநீர் கழிப்பிடம் மற்றும் ரூ.1.28 இலட்சம் மதிப்பீட்டில் பழைய பேருந்து நிலையத்தில் ஆண்களுக்கான சிறுநீர் கழிப்பிடம் ஆகியவை தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.157 நாள். 29.07.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

நகர்மன்ற தலைவர்,
செங்கல்பட்டு நகராட்சி